# மறுபடியும்

பார்க்க விட்டுப் போன இடங்கள்
பழக விட்டுப் போன மனிதர்கள்
படிக்க விட்டுப்போன புத்தகங்கள்

கேட்க விட்டுப்போன சிறுகதைகள்
சொல்ல விட்டுப் போன சொந்தக் கதைகள்
எழுத விட்டுப் போன எண்ண ஓட்டங்கள்

இறக்கி வைக்க விட்டுப்போன மனச்சுமைகள்
பகிர்ந்து கொள்ள விட்டுப்போன நகைச்சுவைகள்
கொடுக்க விட்டுப் போன உதவிக் கரங்கள்

~~தொட~~ நடக்க விட்டுப் போன பாதைகள்
தொட விட்டுப் போன பனி முகடுகள்
தலை நனைக்க விட்டுப் போன அருவிகள்
கால் நனைக்க விட்டுப் போன சமுத்திரக் கரைகள்

விட்டுப் போனதெல்லாம் பட்டுப் பார்க்க
வருமோ வாழ்க்கை
மறுபடியும், மறுபடியும்...

அ. சொ

27 ஆகஸ்டு 2010.
பெங்களூர்